## அக்டோபர் - 5

**"நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்." - எபி 12 : 3.**

ஐயோ, தேவனுடைய உண்மையான பிள்ளைகளில் எத்தனைபேர் தங்களுடைய மனதில் களைத்து, தளர்ந்துபோய் அந்தப் பிரதானமான பந்தயப்பொருளை இழந்துபோகக்கூடிய அபாயத்தில் இருக்கிறார்கள்! அதற்குக் காரணம் கர்த்தரையும், அவர் எவ்வளவு உண்மையாய் எதிர்ப்பை சகித்தார் என்பதை எண்ணவும், அதன் மீது கவனம் செலுதிப்படிக்கவும், அதை அறிந்துகொள்ளவும் கவனித்துப்பார்க்கவும் அவர்கள் தவறியிருக்கிறார்கள். அவருடைய பூரணத்தையும், அவரால் பிரதிநிதித்துவம் கொண்டிருந்த அந்த வெளிச்சம் எப்படி இருளில் பிரகாசித்தது என்றும், ஆனால் அது உயர்வாக மதிக்கப்படவில்லை என்றும், அவர்கள் கவனிக்கிற பிரகாரம், தங்களிலிருந்து பிரகாசிக்கிற வெளிச்சமும், உயர்வாக மதிக்கப்படாது என்றும் அவர்கள் எதிர்பார்ப்பார்கள். எப்படிக் கர்த்தர் எவ்வழியிலும் அநியாயமாகவும், நீதியினிமித்தமாகவும் துன்பம் அனுபவித்தார் என்பதை அவர்கள் கவனித்துப்பார்க்கும் போது, தங்களுடைய சொந்த நடத்தை, நல்ல நோக்கம் கொண்டதாயிருந்தாலும், அபூரணமானதாக இருக்கிறதென்று கண்டுகொள்வார்கள். இது நல்ல போர்சேவகராகக் கடினத்தை சகிக்கவும், நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருக்கவும், எதிர்ப்பின்கீழ் தளர்ந்துபோகாமலிருக்கவும், அவர்களைப் பலப்படுத்தும்.
**- Z ’04, 38 (R 3312)**

நமது கர்த்தர் ஊழியம் செய்த காலத்திலும், துன்பம் அனுபவித்த பொழுதும், அவரை அவருடைய விரோதிகள் தங்களுடைய வார்த்தைகளாலும், செயல்களாலும் எதிர்த்தார்கள். இந்த முரண்பாடுகளை அவர் நீடிய பொறுமையோடும், உறுதியோடும் சகித்தார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதிலும், துன்பம் அனுபவிப்பதிலும், இலக்கை அடைவதிலுமுள்ள தங்களுடைய உறுதியான நோக்கத்திலிருந்து தன் மனத்தைக் கவர அவர்களில் ஒருவராலும் கூடவில்லை. பாவிகள் அவருக்குக் கொடுத்த அவ்வளவு ஏராளமான ஆட்சேபங்களுக்கு மத்தியில் நமது பிரிய இரட்சகர் காண்பித்த நடத்தையின்பேரில் ஒரு இடையறாத சிரத்தையுள்ள சிந்தனை நம்மேல் வரவேண்டிய அப்படிப்பட்ட அனுபவங்களை வெற்றிகரமாக சகிக்க நம்மை சாத்தியமாக்கும். இது, நாம் ஆத்மீக ரீதியில் பலவீனராகி விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை கைவிடுவதிலிருந்து நம்மைத் தடுக்கிறது மட்டுமல்லாமல், ஒரு முடிவான மகிமையானவற்றிக்கு நம்மைப் பலப்படுத்தி உற்சாகப்படுத்தும். **- P ’33, 147.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 10:24,25; யோவா 15:20-24; மத் 27:24-31,38-44; லூக் 4:28,29; பிலி 2:6-8; 1பேது 2:21-23; 4:1; சங் 31:22; ஏசா 35:3,4.**

**கோபுர வாசிப்பு : Z ’11, 122 (R 4802).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்தவார அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அவை என்ன பலனை விளைவித்தன?**